
# 2. சொல்லாதே! சொல்லாதே!



7PHJSY

நீலவானம் தூரமென்று
பறவையிடம் சொல்லாதே
பறவையிடம் சொல்லாதே



அடர்ந்தகாடு இருண்டதென்று
கரடியிடம் சொல்லாதே
கரடியிடம் சொல்லாதே



பெரியகடல் ஆழமென்று
மீன்களிடம் சொல்லாதே
மீன்களிடம் சொல்லாதே



கற்பதெதுவும் கடினமென்று
எங்களிடம் சொல்லாதே
எங்களிடம் சொல்லாதே

பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.



2nd_Tamil_Term-1_Bodypages.indd 18 20-01-2020 19:35:04

# பயிற்சி

## சொல்லிப் பழகுக

தூரமென்று ஆழமென்று இருண்டதென்று

கடினமென்று கற்பதெதுவும் பறவையிடம்

கரடியிடம் மீன்களிடம் எங்களிடம்

## படித்தும் எழுதியும் பழகுக

பறவை கரடி மீன்கள்

இருட்டு ஆழம் கடினம் தூரம்

நீலவானம் அடர்ந்தகாடு பெரியகடல்

## பொருத்துக

யாருக்கு எது கடினம் இல்லை?

| | | |
|---|---|---|
| 1. பறவை | – | காட்டின் இருட்டு |
| 2. கரடி | – | கற்றுக் கொள்ளுதல் |
| 3. மீன் | – | வானத்தின் தொலைவு |
| 4. குழந்தைகள் | – | கடலின் ஆழம் |

9EC3WL


## பேசுவோம் வாங்க!

இப்பாடலில் உங்களுக்குப் பிடித்தவை பற்றிக் கலந்துரையாடுக.

## எனக்கு எது கடினமில்லை வரைக



- வானில் பறப்பேன் ☐
- குழி பறிப்பேன் ☐
- மரம் ஏறுவேன் ☐



- நன்றாகப் பேசுவேன் ☐
- நீரில் நீந்துவேன் ☐
- நடனம் ஆடுவேன் ☐



- வேகமாக ஓடுவேன் ☐
- ஓட்டைச் சுமப்பேன் ☐
- பாடல் பாடுவேன் ☐



- மோப்பம் பிடிப்பேன் ☐
- மரம் ஏறுவேன் ☐
- பாரம் சுமப்பேன் ☐

## ஒத்த ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக

| கரடியிடம் | தூரமென்று |
|---|---|
| | |

## முதல் எழுத்தை மாற்றி எழுதுக

| | | |
|---|---|---|
| ஆடு | பாடு | காடு |
| வால் | | |
| படை | | |
| கல் | | |

## பலமுறை சொல்லிப் பழகுக

சறுக்கு மரத்தில் சறுக்கலாம்
வழுக்கு மரத்தில் வழுக்கலாம்

காற்றிலே பறந்த கீற்று
சேற்றிலே விழுந்தது

உருண்டு விழுந்த உருளை
உருளுது புரளுது



2nd_Tamil_Term-1_Bodypages.indd 20 20-01-2020 19:35:06